[1984 மார்ச் 21

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக அமைக்கப்பட்டிருக்கிற காய்கறி சங்கங்கள் இருந்தாலும் தனியார்களிடத்தில் காய்கறிகளை வாங்குகின்ற பழக்கம் சத்துணவு அமைப்பாளர்களிடம் தொடர்கிறதா ? ஆமெனில், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்புக்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றும் திட்டம்.

(*309—வினா 17996) திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றும் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றும் திட்டத்தினை தற்போது அரசு தள்ளி வைத்துள்ளது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை திருச்சிக்கு மாற்றும் திட்டம் இருப்பதாகவும், ஆனால் அது தற்போது அரசால் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி தமிழகத்தின் மையப் பகுதியாக இருப்பதால் நிர்வாக சௌகரியத்திற்கும் அது வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அத்திட்டம் போடப்பட்டது என்று கருதுகிறேன். ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, திருச்சி மாநிலத்தின் மையப் பகுதி. மாண்புமிகு உறுப்பினரின் ஊருக்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தாலும் அதை அங்கே கொண்டு வந்துவிட வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் அந்தக் கழகத்திலே இருக்கும் பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் அவர்களுக்கு இருக்கும் பல்வேறு சிரமங்களை எடுத்துச் சொன்ன காரணத்தாலும், அதிலே தாய்மார்கள் அதிகமான அளவில் இருப்பதால் அவர்களுக்கு இருக்கும் சங்கடங்களை எடுத்துச்சொன்ன காரணத்தாலும், மனிதாபிமான அடிப்படையில் அதைத் தள்ளிவைத்து இருக்கிறோம். அதை இப்போது கைவிட்டு விட்டாலும், பின்னர் அந்தத் தொழிலாளர்களோடு பேசிப் பார்த்து, அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை திருச்சிக்கு மாற்றுவது குறித்த முடிவு அதிலே உள்ள தொழிலாளர்களின் நலன் கருதி, அவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தினை மனதில் கொண்டு, அதிலே உள்ள தாய்மார்களின் சௌகரியத்தை முன்னிட்டு, அதை ஒத்திப்போட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அங்கே எத்தனை தாய்மார்கள் பணிபுரிகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா? இப்படி ஒவ்வொரு பிரச்சனைக்கும் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் என்று சொன்னால், அந்தப் பகுதி மேம்படுவதற்கும், பொது மக்களுக்கு சௌகர்யம் கிடைப்பதற்கும் பாதகம் ஏற்படுமே, ஆகவே, அதை மறுபரிசிலனை செய்து, அந்தக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை அங்கே மாற்றிக்கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எத்தனை தாய்மார்கள் அங்கே இருக்கிறார்கள் என்ற கணக்கு தற்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் அங்கே நிறைய தாய்மார்கள் பணிபுரிகிறார்கள் என்பதை மட்டும் என்னால் இப்போது சொல்ல முடியும். அவர்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களை பார்த்து, அவர்களுடைய நலன் கருதி அந்தத் திட்டத்தைத் தள்ளிப்போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இங்கேயே அதை வைத்துக் கொண்டு சிறப்பாக நடத்த முடியுமா என்றும் பரிசீலித்து வருகிறோம். ஒருவேளை சற்று காலம் கடந்து அவர்களோடு பேசினால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் நிறைவேற்ற முடியும் என்று கருதுகிறேன். இருந்தாலும் அவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டுதான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 21

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, திருச்சி வர இருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை தற்போது தள்ளி வைத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொனனார்கள். தொழிலாளர் நலன் கருதியும், அங்கேயுள்ள தாய்மார்களின் நலன் கருதியும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நாட்டின் நலன் கருதுகின்றபோது அந்தத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருச்சியில் இருப்பதுதான் நியாயம் என்று நாட்டு மக்களால் உணரப்படுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு உடனடியாக அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே நாட்டின் நலனிலே அந்தத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னையில் பணியாற்றுவதால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. திருச்சியிலே இருந்தாலும், இங்கேயிருந்தாலும் அது பொது மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளைச் சிறப்பாகச் செய்து கொண்டுதான் இருக்கும். இங்கே இருப்பதை விட திருச்சியில் இருந்தால், தமிழகத்தின் மையப் பகுதியாக திருச்சி இருக்கிறது என்பதால், நிர்வாக வசதி கூடுதலாக இருக்கும் என்பதால் திருச்சிக்கு மாற்றவேண்டும் என்று பரிசீலித்தோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் அது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அதை அன்றைக்கே செய்து இருப்போம். தொழிலாளர்களின் நலனைப் பொறுத்து நிர்வாகம் சற்று சிரமத்தை எடுத்துக் கொண்டாலும், நாம் இந்த நிலையை எடுக்கவேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தமைக்கும் திட்டம்.

310—(*வினா எண் 22346) திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து, திருச்சியைத் தலைமையாகக் கொண்டு ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?